**EP No.06/2023**

**04.02.2025**

**பெயர் – திலகவதி (Pw1)**

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) எதிர்மனுதாரர் என் கணவர் என்றால் சரிதான். நானும், எதிர்மனுதாரரும் எத்தனை வருடங்களாக பிரிந்து வாழ்ந்து வருகிறோம் என்றால் கடந்த 25 வருடங்களாக பிரிந்து வாழ்ந்து வருகிறோம். ஜீவனாம்ச வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக 1998 ம் ஆண்டு எனது அப்பா எனது பெயருக்கு செட்டில்மெண்ட பத்திரம் எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். என் அப்பாவிற்கு பாத்தியப்பட்ட சொத்தை எனது பெயருக்கு செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் எழுதிக் கொடுத்தார். என் கணவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை தான் எனக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் என் கணவர் எழுதி வைத்த சொத்தானது என் அப்பா ராமசாமிக்கு சொந்தமான சொத்தை விற்று வந்த பணத்தில் என் கணவர் வாங்கிய சொத்து ஆகும். மேற்கண்ட விவரத்தை அசல் வழக்கில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. மேற்கண்ட செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் பெற்ற சொத்தை நான் வேறு ஒரு நபருக்கு விற்பனை செய்துவிட்டேன் என்றால் சரிதான். என் மகளின் திருமணத்திற்காக வாங்கிய கடனை திரும்ப செலுத்துவதற்காக மேற்கண்ட சொத்தை விற்பனை செய்தேன். மேற்கண்ட விவரத்தையும் நான் எனது அசல் வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

(2) எதிர்மனுதாரர் என் பெயருக்கு 1998 ஆண்டு 1 ஏக்கர் 15 செண்ட் நிலத்தை எழுதிக் கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் எனது அசல் வழக்கில் எதிர்மனுதாரர் எனக்கு பெயருக்கு 1998 ஆண்டு 1 ஏக்கர் 15 செண்ட் நிலத்தை எழுதிக் கொடுத்தார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் அசல் வழக்கில் மேற்கண்டவாறு கூறிவிட்டு தற்போது நிறைவேற்று மனுவில் முரண்பாடாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனது பெயரில் கொமரலிங்கம் வசந்தம் நகரில் ஒரு வீடு உள்ளது என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் வில்லங்க சான்று இணைய வழி நகலில் நான் லிங்கப்பன் என்பவரிடம் இருந்து 04.12.2017 ம் தேதி கொமரலிங்கம் வசந்தம் நகரில் சொத்து கிரையம் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் என் பெயரில் சொத்து எதுவும்

இல்லை. நான் சந்தியா நிதி நிறுவனம் என்ற பதிவு பெற்ற நிறுவனத்தின் பங்குதாரர் என்றால் சரிதான்.

(3) நான் மாண்பமை உடுமலைப்பேட்டை சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.389/2022 என்ற எண்ணில் வழக்கு ஒரு காசிநாதன் என்பவருக்கு எதிராக தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். மேற்கண்ட வழக்கு சமரசமாக முடித்துக் கொள்ளப்பட்டது என்றால் சரிதான். மேலும் மாண்பமை உடுமலைப்பேட்டை சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண். 325/2022 என்ற எண்ணில் ஒரு செந்தில் குமார் என்பவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கும் சமரசமாக முடித்துக் கொள்ளப்பட்டது. ஒரு வெங்கடாச்சலம் என்பவரிடம் இருந்து சந்தியா பைனான்சின் பங்குதாரராக இருந்து 09.06.2015 ம் தேதி அடமான கடன் ஆவணம் பெற்றேன் என்றால் சரிதான். **மேற்கண்ட அடமான கடன் ஆவணம் அசல் எ.ம.சா.ஆ.1 ஆகும்**. தற்போது என்னிடம் காட்டப்படும் 16.06.2017 தேதியிட்ட செல் ரசீது ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது என்றால் சரிதான். **மேற்கண்ட 16.06.2017 தேதியிட்ட செல் ரசீது ஆவணம் அசல் எ.ம.சா.ஆ.2 ஆகும்**.

(4) நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் எனது கணவரின் பெயரில் சொத்து உள்ளதாக குறிப்பிட்டுள்ள நிலையில் அதற்குண்டான ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. எனது மகன் பெயர் ரஞ்சித் குமார் என்றால் சரிதான். எனது கணவர் எனது மகனுக்காக மேற்கண்ட நிலத்தில் வீடு கட்டிக் கொடுத்தார் என்றாலும், அந்த வீட்டில் தான் எனது மகன் தற்போது வசித்து வருகிறார் என்றாலும் சரியல்ல. என் மகன் அவரது தாத்தாவின் பழைய வீட்டில் தான் வசித்து வருகிறார். என் கணவருக்கு பாத்தியப்பட்ட வீட்டை தான் என் மகனுக்கு கொடுத்துள்ள விவரம் எனக்கு தெரியும் என்றாலும், வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது கணவர் எனது மகன் ரஞ்சித் குமாரின் பராமரிப்பில் தான் தற்போது இருக்கிறார் என்றால் சரியல்ல.

(5) எனது கணவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அனைத்தையும் எனக்கும், எனது மகனுக்கும் எழுதிக் கொடுத்துவிட்டார் என்றாலும், தற்போது எனது கணவர் சொத்துக்கள் எதுவும் இன்றி இருக்கிறார் என்றாலும் சரியல்ல. எனது கணவருக்கு அவரது இரண்டு கால் முட்டிகளும் பாதிக்கப்பட்டு நடக்க முடியாத நிலையில் உள்ளார்

என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அவர் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் தான் இருக்கிறார். என் கணவர் கடந்த 4 வருடங்களாக நுரையீரல் பாதிக்கப்பட்டு மூச்சு விட கஷ்டப்பட்டு கொண்டிருக்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அவர் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் தான் இருக்கிறார். எனது கணவருக்கு முதுகு தண்டு வட அறுவை சிகிச்சை செய்வதற்காக கோவை அரசு மருத்துவமனைக்கு செல்ல இருக்கும் விவரம் எனக்கு தெரியுமா என்றால் அவர் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் தான் இருக்கிறார்.

(6) நான் பைனான்ஸ் நடத்தி நல்ல வசதியான நிலையில் தற்போது இருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் என் வங்கி சேமிப்பு கணக்கு விவரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். என் கணவர் பண வசதி எதுவும் இன்றி நடக்க முடியாத நிலையில் தற்போது உள்ளார் என்றாலும், நான் என் கணவரிடம் இருந்து ஜீவனாம்சம் பெற்று தான் வாழ வேண்டும் என்ற நிலையில் இல்லை என்றாலும் சரியல்ல. எனக்கும், எதிர்மனுதாரருக்கும் உள்ள கௌரவ பிரச்சனையின் காரணமாகத்தான் வயதான எதிர்மனுதாரர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கு முன்னிட்டும் அல்லது பின்னிட்டும் எதிர்மனுதாரர் பெயரில் எந்த ஒரு சொத்தும் இல்லை என்றாலும், தற்போது எனது மகன் தான் எதிர்மனுதாரரை பராமரித்து வருகிறார் என்றாலும் சரியல்ல. எனவே இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.02.04 16:48:03 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்